# ARUL ANANDAR COLLEGE (AUTONOMOUS)
## KARUMATHUR – 625 514, MADURAI DT

## STUDENTS’ COUNCIL ELECTION (2026-2027)

## DECLARATION OF THE CANDIDATES

**General Procedures for All Secretaries and Representatives**

**Nomination Process**

- Each nomination should be scrutinized and forwarded by the Mentor and Head of the Department.
- While submitting the nomination form to contest in the election, the nominee should have 55% mark and should not have any arrears and he/she has to produce the acknowledge certificate from the Controller of Examinations.
- The nominee should have 75 Percent of attendance during all the previous semesters and he/she has to produce attendance certificate from the office superintendent.
- No disciplinary action against the nominee should have been taken in the college. The nominee has to produce a certificate in this regard from the Vice-Principal.
- No disciplinary action against the nominee should have been taken in the hostel (if resident of hostel). He/she should get no objection certificates from the Hostel Director.
- Candidates must complete and submit the nomination form by the deadline and after which no nomination will be accepted.
- Each candidate requires two endorsements from fellow students.
- One person can contest in only one post.

**Campaign Guidelines**

- Campaigning is allowed only during the designated period set by the Election Committee.
- All campaign materials (posters, flyers, pamphlets etc.) must be pre-approved by the committee.
- No defamation of other candidates; Campaigns must be respectful and free of personal attacks.
- Bribery, coercion, or giving gifts in exchange for votes is strictly prohibited.
- Students are to refine from party politics and link with any anti-social elements.
- Classroom campaigning will be permitted only on designated dates and times, and candidates must collect votes in the departments where they wish to ask votes only after obtaining prior approval from the head of the department.
- No outsider is permitted to play any role in the election process; nor shall any outsider be allowed into the campus during the days of election.
- No election related expenditure will be permitted.
- Campaign through social media is strictly prohibited. If any students share campaign posters and messages through WhatsApp, Facebook, Instagram, YouTube etc., he/she will be disqualified to contest in the election.
- If the management comes to know the involvement of any candidate in social media campaign after the election the contestant will be removed from the council.

**Debates and Public Speaking**

- Participation in official debates or Question& Answer sessions organized by the Election Committee is mandatory.
- Candidates must follow time limits and avoid personal attacks during speeches.

**Disciplinary Actions During the campaigning**

- Violations of any rules prescribed may result in:
    - Warnings
    - Suspension from campaigning
    - Disqualification from the election
- **THE ELECTION COMMITTEE'S DECISION IS FINAL AND BINDING.**

**Non-interference in Internal Administration**

- ❖ The student's council members shall have no right to interfere in matters concerning student discipline or the internal administration of the college which shall be the prerogative of the Principal.

**Code of Conduct**

- ❖ Victory celebration, if any should be confined to the campus only. Marching to the main road and disturbing the public or the traffic should be avoided and also use of fire crackers and inside and outside the campus are strictly forbidden. If found involved in above mentioned activities the candidate will be removed from the council.
- ❖ The student's council members shall neither participate in strikes nor instigate other students to boycott classes or to indulge in acts of lawlessness and violence, but shall endeavour their best to settle all disputes by peaceful dialogue with the authorities concerned.
- ❖ No members of the College Students' Council shall publish any report about the College and faculty in newspapers nor take any matter concerning the College to the Court of Law without the prior written permission of the Principal.
- ❖ The Council Members upholdintegrity, fairness, and transparency in all roles. They avoid favouritism or misuse of position andpromote a positive and respectful culture in the college/ department.

**Removal of Office –Bearers**

- ❖ If a council member breaches the college rules (e.g., bullying, academic dishonesty, indulged in ragging and misconduct), the principal has the power to initiate disciplinary action that could lead to remove from the council / dismissal from the college.
- ❖ Falling below the required academic standards (Lack of attendance and Arrear in Subjects) could result in removal from the students' council.
- ❖ Using the position for personal gain or mishandling students' council could result in removal from the council.
- ❖ Involvement in illegal activities or receiving disciplinary sanctions from the college also will result in removal from the council.

- The elected members of the council must attend all the meetings scheduled on respective dates. Failure to attend the above meetings MORE THAN ONCE without prior permission of Principal shall lead to termination of membership.
- All the elected members shall attend all the College functions. Failure to attend all the functions without prior permission of Principal shall lead to termination of membership.
- Vacancies arising from the termination of membership due to non-attendance and disciplinary action shall be filled by the principal.

**மாணவர் மன்றத் தேர்தல் வேட்பு மனு தாக்கல் நடைமுறைகள்:**

- ஒவ்வொரு வேட்பு மனுவும் மாணவ வழிகாட்டிப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவரால் கவனமாகப் பரிசீலிக்கப்படும்.
- வேட்பு மனுப் படிவத்தில் பருவத் தேர்வுகளில் தோல்வியடையவில்லை மற்றும் 55 சதவீத மதிப்பெண்கள் சரியாக உள்ளது என்பதற்கான உறுதிச்சான்றிதழைத் தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.
- அனைத்துப் பருவங்களிலும் 75 சதவீத வருகைப் பதிவு உள்ளதற்கான உறுதிச்சான்றிதழை கல்லூரி அலுவலகக் கண்காணிப்பாளரிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
- கல்லூரியில் எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதற்கான உறுதிச்சான்றிதழை துணை முதல்வரிடம் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.
- விடுதி மாணவராக இருந்தால், விடுதியில் எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதற்கான உறுதிச்சான்றிதழை விடுதி இயக்குனரிடம் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.
- வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கால அவகாசத்துக்குள் சரியாகச் சமர்ப்பிக்க வேண்டும். தாமதமாகப் பெறப்படும் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படாது.
- வேட்பு மனு தாக்கல் செய்யும் மாணவர்கள் தங்களுடன் பயிலும் இரண்டு மாணவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும்.
- ஒரு மாணவர் ஒரு பதவிக்கு மட்டுமே போட்டியிட முடியும்.

**தேர்தல் பரப்புரைக்கான விதிமுறைகள்:**

- தேர்தல் குழுவால் அனுமதிக்கப்பட்ட நேரங்களில் மட்டுமே பரப்புரையில் ஈடுபட வேண்டும்.
- போஸ்டர்கள், தோரணங்கள், துண்டுப் பிரச்சாரங்கள் போன்றவை தேர்தல் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே பயன்படுத்தப்பட வேண்டும்.
- பிற வேட்பாளர்களை அவதூறாகப் பேசுவது தவிர்க்கப்பட வேண்டும். பிரச்சாரம் கண்ணியமாகவும் தனிப்பட்ட தாக்குதல்கள் இல்லாமலும் இருக்க வேண்டும்.
- ஓட்டுக்காக பரிசுப் பொருட்கள் , லஞ்சம் கொடுப்பது , கட்டாயப்படுத்துவது போன்ற செயல்பாடுகள் தடை செய்யப்பட்டுள்ளன.
- கட்சி அரசியல் , சமூக விரோத சக்திகளின் தலையீடு போன்றவை மாணவர் மன்றத் தேர்தலில் இருக்கக் கூடாது.
- தேர்தல் குழுவால் அனுமதிக்கப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் மட்டுமே வகுப்பறைகளில் பிரச்சாரம் செய்யலாம். சம்பந்தப்பட்ட துறைத் தலைவரின் அனுமதி பெற்ற பின்னரே வகுப்பறைகளில் பிரச்சாரம் மேற்கொள்ளலாம்.
- தேர்தல் நடைமுறைகளில் கல்லூரி மாணவராக இல்லாத வெளிநபர்களுக்கு எந்த அனுமதியும் இல்லை. தேர்தல் நாட்களில் வெளி நபர்களுக்கு கல்லூரி வளாகத்துக்குள் நுழைய அனுமதியில்லை.
- தேர்தல் தொடர்பான செலவுகளுக்கு அனுமதியில்லை.
- சமூக ஊடகங்களில் தேர்தல் பிரச்சாரம் செய்ய அனுமதியில்லை. வாட்ஸப் , பேஸ்புக், இன்ஸ்டாகிராம், யூடியூப் போன்றவற்றில் தேர்தல் போஸ்டர்களோ , காணொலிக் காட்சிகளோ , தகவல்களோ பகிரப்பட்டால் சம்பந்தப்பட்ட வேட்பாளர் உடனடியாகத் தகுதி நீக்கம் செய்யப்படுவார்.
- தேர்தல் முடிந்த பிறகு இது மாதிரியான சமூக ஊடகப் பதிவுகள் பகிரப்பட்டால் சம்பந்தப்பட்ட மாணவப் பிரதிநிதி மாணவர் மன்றத்திலிருந்து உடனடியாக நீக்கப்படுவார்.

**பிரச்சாரம் மற்றும் பொதுக்கூட்டம்:**

- தேர்தல் குழு ஒருங்கிணைத்து நடத்தும் விவாதம் மற்றும் பொதுக் கூட்டத்தில் வேட்பாளர்கள் கண்டிப்பாகப் பங்கேற்க வேண்டும்.
- பொதுக்கூட்டத்தில் பேசும் போது தனிப்பட்ட தாக்குதல்களுக்கு அனுமதியில்லை. குறிப்பிட்ட நேரத்திற்குள் பேச்சை முடிக்க வேண்டும்.
- மேற்சொல்லப்பட்ட விதிகள் மீறப்பட்டால் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- எச்சரிக்கை விடுத்தல்
- பிரச்சாரத்திலிருந்து நீக்கப்படுவது
- தேர்தலிலிருந்து தகுதிநீக்கம் செய்யப்படுவது

➢ தேர்தல் குழுவின் முடிவே இறுதியானது.

**தேவையற்ற தலையீடு கூடாது:**

➢ கல்லூரி மாணவர்களின் ஒழுங்குக் கட்டுப்பாடுகள் , நிர்வாகத்தின் உள் விவகாரங்கள் போன்ற முதல்வரின் தனிப்பட்ட அதிகார வரம்புக்கு உட்பட்ட விஷயங்களில் தலையிட மாணவர் மன்ற உறுப்பினர்களுக்கு எந்த உரிமையும் இல்லை.

**தேர்தல் நடத்தை நெறிமுறைகள்:**

➢ தேர்தல் வெற்றிக் கொண்டாட்டங்கள் கல்லூரி வளாகத்திற்குள் மட்டுமே அனுமதிக்கப்படும். வளாகத்திற்கு வெளியே சாலைகளில் பிரச்சாரம் செய்வது , பொது மக்களுக்கு இடையூறு செய்வதுபோன்றவை தவிர்க்கப்பட வேண்டும். வளாகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பட்டாசுகள் வெடிக்க கண்டிப்பாக அனுமதியில்லை. மீறினால் சம்பந்தப்பட்ட மாணவப் பிரதிநிதி மாணவர் மன்றத்திலிருந்து உடனடியாக நீக்கப்படுவார்.

➢ சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவது , மறியல், போராட்டம் போன்றவற்றில் ஈடுபடுவது , வகுப்புகளைப் புறக்கணிக்கும்படி மற்ற மாணவர்களை வற்புறுத்துவது போன்ற செயல்பாடுகளில் மாணவர் மன்றப் பிரதிநிதிகள் ஈடுபடக் கூடாது. பிரச்சினைகளை அமைதியான முறையில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் அதிகாரிகளுடன் சுமுகமான முறையில் பேசித் தீர்க்க வேண்டும்.

➢ மாணவர் மன்றப் பிரதிநிதிகள் கல்லூரி மற்றும் ஆசிரியர்கள் குறித்து செய்தித்தாள்களுக்கோ பிற ஊடகங்களுக்கோ புகார் அளிக்கக் கூடாது. அத்துடன் கல்லூரி விவகாரங்களில் முதல்வரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதியின்றி சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது.

➢ மாணவர் மன்றப் பிரதிநிதிகள் அவர்களுடைய அனைத்துக் கடமைகளிலும் கண்ணியத்தையும், நேர்மையையும், வெளிப்படைத் தன்மையையும் பேண வேண்டும். தங்களுடைய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவது , பாரபட்சம் காட்டுவது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். கல்லூரி மற்றும் தங்கள் துறையின் மதிப்பையும் பண்பாட்டையும் மேம்படுத்தும் வகையில் செயல்பட வேண்டும்.

**பதவி நீக்கம்:**

- மாணவர் மன்றஉறுப்பினர்கள் கல்லூரி விதிமுறைகளை மீறித் தகாத நடவிடிக்கைகளில் ஈடுபட்டால் , அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் மன்றத்திலிருந்து அவரை நீக்கவும் தேவைப்பட்டால் கல்லூரியிலிருந்து நீக்குவதற்கும் முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.
- வருகைப்பதிவு, முழுத்தேர்ச்சி போன்ற தகுதிகளை இழக்கும் மாணவர் மன்றப் பிரதிநிதிகள் மன்றத்திலிருந்து நீக்கப்படுவார்கள்.
- மாணவர் மன்றப் பொறுப்பைத் தனிப்பட்ட நலன்களுக்காகப் பயன்படுத்துவது, பொறுப்பைத் தவறாகப் பயன்படுத்துவது போன்றவற்றில் ஈடுபட்டால் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள்.
- சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டாலோ , கல்லூரியால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலோ சம்பந்தப்பட்ட மாணவர் பதவி நீக்கம் செய்யப்படுவார்.
- தேர்ந்தெடுக்கப்படும் மாணவப் பிரதிநிதிகள் அனைவரும் மாணவர் மன்றக் கூட்டங்கள் அனைத்திலும் சரியான நேரத்தில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். முறையான அனுமதியின்றி ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களில் கலந்து கொள்ளத் தவறினால் சம்பந்தப்பட்ட பிரதிநிதியைப் பதவி நீக்கம் செய்ய முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.
- கல்லூரியில் நடக்கும் அனைத்து பொது விழாக்களிலும் மாணவப் பிரதிநிதிகள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். முறையான அனுமதியின்றி இவ்விழாக்களில் கலந்து கொள்ளத் தவறினால் சம்பந்தப்பட்ட பிரதிநிதியைப் பதவி நீக்கம் செய்ய முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.
- பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களின் காலியிடங்களை நிரப்ப முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.

## UNDERTAKING BY THE CANDIDATE

I, **.......................................................**, Roll Number **................................................**, contesting for the post of **.......................................................**, hereby undertake that I will strictly adhere to the rules and regulations laid down by the Election Commission of our College.

I have completely read and understood the above procedures, rules, and regulations. If I violate any provision of the Code of Conduct for the College Council Election 2026–27, I shall accept the disqualification of my candidature and any further disciplinary action that may be taken against me.

**வேட்பாளரின் உறுதிமொழி**

நான், ......................................................., பதிவு எண் ...................................., ........................................................................................ என்ற பதவிக்கு போட்டியிடும் வேட்பாளராக, எங்கள் கல்லூரியின் தேர்தல் ஆணையம் வகுத்துள்ள விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை கண்டிப்பாகக் கடைபிடிப்பேன் என்று இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

மேற்கண்ட தேர்தல் நடைமுறைகள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை நான் முழுமையாக வாசித்து புரிந்துகொண்டுள்ளேன். கல்லூரி மாணவர் பேரவைத் தேர்தல் 2026–27-க்கான நடத்தை விதிமுறைகளில் ஏதேனும் ஒன்றை நான் மீறினால், எனது வேட்புமனு தகுதி நீக்கம் செய்யப்படுவதையும், என்மீது எடுக்கப்படும் பிற ஒழுங்கு நடவடிக்கைகளையும் ஏற்றுக்கொள்கிறேன்.

Date / தேதி: Signature / கையொப்பம்